# ருக்மியின் கதை

## சாந்திப்பிரியா



பகவான் கிருஷ்ணரின் மனைவி ருக்மணி தேவியின் சகோதரன் ருக்மியின் கதை இது.

முன்னொரு காலத்தில் விதர்பா நாட்டில் (இன்றைய மத்தியப் பிரதேசம்) போஜகஜா எனும் இடத்தில் இருந்த பீஷ்மகா என்ற மன்னனுக்கு ஆறு குழந்தைகள் பிறந்தன. மகனுடைய பெயர் ருக்மி. கடைசி மகள் ருக்மணி என்பவள். அவர்களைத் தவிர மற்ற அனைவரும் பெண்கள். முன்னொரு பிறவியில் கிடைத்து இருந்த சாபத்தினால் மகாலஷ்மி தேவியே ருக்மணி என்ற பெயரில் அவருக்குப் பிறந்து இருந்தாள். ருக்மியும் பூர்வ ஜென்மத்தில் ஒரு அசுரனின் சாபம் பெற்று ரும்மியாக யாதவ குலத்தில் பிறந்திருந்தான். மகாலஷ்மி தேவிதான் ருக்மணி தேவியாகப் பிறந்துள்ளனர் என்பதோ யாருக்கும் தெரியாது. ருக்மணி தேவி பகவான் கிருஷ்ணரை மனதாற விரும்பினாள். தனது சகோதரியை பகவான் கிருஷ்ணருக்கு மணமுடிக்க

அவனுடைய தந்தை முடிவு செய்தபோது அதை ருக்மி எதிர்த்தான். ஆகவே உடனடியாக அவளுக்கு சிறந்த மாப்பிள்ளை கிடைக்க ஒரு சுயம்வரத்தை நடத்த ஏற்பாடு செய்து விட்டான். அந்த சுயம்வரத்துக்கு பகவான் கிருஷ்ணருக்கு விரோதியான ஜரசன்திரா என்ற மன்னனும் வந்திருந்தான். வந்திருந்த அனைத்து மன்னர்களும் பகவான் கிருஷ்ணருக்கு விரோதிகள். ஆகவே அவர்கள் அந்த சுயம்வரத்திற்கு நிச்சயமாக பகவான் கிருஷ்ணர் வருவார் என எதிர்பார்த்தனர். அப்படி வந்தால் அவரை அவமானப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தனர். அப்படி செய்தால் அந்த அவமானத்தைத் தாங்காமல் பகவான் கிருஷ்ணர் சுயம்வர மண்டபத்தை விட்டு வெளியேறி விடுவார் எனவும் எதிர் பார்த்தனர். சுயம்வரத்தில் இறுதியாக செட்டி நாட்டு மன்னன் சிசுபாலனுக்கு ருக்மணி தேவியை மணம் முடிக்க ருக்மி முடிவு செய்தான். சிசுபாலன் அரக்க குலத்தவன். பகவான் கிருஷ்ணரின் எதிரி. அவர்கள் அனைவரும் யாதவர்களை அழிக்க நினைத்தவர்கள். இதற்கிடையே அவர்களில் இருந்த பகவான் கிருஷ்ணரை மனமாற விரும்பிய ஒரு மன்னன், திருமண சேதியை பகவான் கிருஷ்ணரிடம் கொண்டு சென்றான். அவளை எப்படியாவது காப்பாற்றி மணக்குமாறு கூறினான். சற்றும் தயங்கவில்லை பகவான் கிருஷ்ணர். உடனே தன்னுடைய சகோதரன் பகவான் பலராமனிடம் கூறி பெரும் படையைத் திரட்டிக் கொண்டு தன்னுடன் வருமாறு கூறிய பின் திருமணம் நடக்க இருந்த இடத்திற்குச் சென்றார். நான்கு வெள்ளை குதிரைகள் பூட்டிய தேரில் திருமணம் நடந்து கொண்டு இருந்த மண்டபத்தை அடைந்து ருக்மணி தேவியைத் தூக்கி வந்தார். அவரைத் துரத்திச் சென்ற சிசுபாலனுடைய சேனையினர் பலரும் உயிர் இழக்க சிசுபாலனும் ஒரு பெண்ணிற்காக தான் ஏன் உயிர் விட வேண்டும் என எண்ணியவனாக ஓடிவிட்டான். மற்ற மன்னர்களும் தோற்று ஓடினார் என்றாலும் ருக்மணியின் சகோதரன் ருக்மியோ பகவான் கிருஷ்ணரை விடாமல் துரத்திச் சென்றான். அவனை கொல்ல நினைத்த பகவான் கிருஷ்ணரிடம் தன் சகோதரனுக்காக உயிர் பிச்சைக் கேட்டாள் ருக்மணி. ஆகவே அவர் எய்த ஆயுதம் அவன் தலை மயிரையும், மீசையையும் வழித்து விட்டுச் சென்றது. ருக்மி உயிர் தப்பினான்.

ஆனால் அவனால் அந்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆகவே கைலாயம் சென்று பகவான் சிவபெருமானைத் துதித்து தவம் செய்தான். பல ஆண்டுகள் தவம் செய்ய அதனால் மனம் மகிழ்ந்த பகவான் சிவபெருமான் அவன் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி அவனுக்கு ஒரு ஆயுதத்தை அளித்தார். அதை அவன் பகவான் மகாவிஷ்ணுவிற்கு எதிராகப் பயன்படுத்தினால் பலனின்றிப் போய்விடும் என்ற நிபந்தனையுடன் தந்தார். அவனும் தன் நாடான போஜகடாவிற்கு சென்று ஆட்சி செய்யத் துவங்கினான். சில நாட்களில் மீண்டும் பகவான் கிருஷ்ணருடன் யுத்தம் செய்து தோற்றுப் போனான். அந்த யுத்தத்தில் தோற்றுப் போனது அவனுக்கு திருப்பு முனையாக அமைந்தது. இனி பகவான் கிருஷ்ணருடன் சண்டையிடுவதை விடுத்து சமாதானமாகப் போய் விடலாம் என்று மனதை மாற்றிக் கொண்டான். அதை அறிந்த பாண்டவர்கள் அவனை மகாபாரத யுத்தத்தில் தமக்கு உதவ அழைத்தனர். யுத்தத்தில் அர்ஜூனன் சண்டை இட முடியாமல் போனால் மட்டுமே தன்னால் வந்து உதவ முடியும் எனக் கூறிவிட்டான். அதை அறிந்த அர்ஜூனன் அவனை கேலி செய்து அனுப்பி விட்டான். அதனால் மீண்டும் அவமானத்தினால் மனம் வருந்தியவன் தன்னுடைய உதவியை துரியோதனனுக்கு அளிக்க முடிவு செய்து அவனை அணுகிய பொழுது துரியோதனனும் அதை நிராகரித்து விட்டான். எந்த இடத்திலும் தனக்கு கௌரவம் இல்லை என்பதை அறிந்த ருக்மி தன் நாட்டிற்கு திரும்பி வந்து சோகத்தில் ஆழ்ந்து விட்டான். அந்த நேரத்தில் கலிங்க மன்னன் அவனிடம் சென்று பக்கத்து நாட்டில் இருந்த பகவான் பாலபத்ரராமா என்ற மன்னனுடன் சூதாடி ஜெயித்து அவனுடைய நாட்டை பிடுங்கிக் கொள்ள வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்தான். பகவான் பாலபத்ரராமா யார் ? பகவான் மகா விஷ்ணுவே பகவான் பாலபத்ரராமா என்ற உருவில் வாசுதேவருக்குப் மகனாக பிறந்து இருந்தார். பூமியில் அசுரர்களினால் அக்கிரமம் பெருகி விட்டதினால் அவர்களை அழிக்க வேண்டும் என்று பூமாதேவி வேண்டியதின் விளைவாக அவர் அவதாரம் எடுத்து இருந்தார். பகவான் பாலபத்ரராமாவுடன் சூதாட்டம் துவங்கியது. முதலில் ருக்மி வென்றான். அடுத்தடுத்த ஆட்டத்தில்

பகவான் பாலபத்ரராமா வென்று விட இராஜ்யம் முழுவதையும் பறி கொடுக்க வேண்டிய நிலைக்கு ருக்மிக்கு வந்தது. அவனுடன் வந்திருந்த அனைத்து மன்னர்களும் ருக்மியுடன் சேர்ந்து கொண்டு பகவான் பாலபத்ரராமா வெற்றி பெற்றதை ஏற்றுக் கொள்ளாமல் தகறாறு செய்யத் துவங்கி சண்டையிடத் துவங்க பகவான் பாலபத்ரராமா எழுந்து வந்து ருக்மியின் தலையில் ஒரு இரும்புத் தடியால் தாக்க ருக்மி இறந்து விழுந்தான். மற்றவர்கள் தோற்று ஓடினர். அவன் பெற்றிருந்த சாபத்தின்படி பகவான் மகாவிஷ்ணுவினால் அவன் மரணம் நிகழ்ந்தது. பகவான் கிருஷ்ணரே பகவான் விஷ்ணுவின் அவதாரம் என்பதையும், ருக்மணி தேவி அவருடைய மனைவியுமான மகாலஷ்மி தேவியின் அவதாரம் என்பதையும் புரிந்து கொண்டவன் அவர்களை தான் மரணம் அடையும் தருவாயில் வணங்கினான்.

# The story of Rukmi

# Santhipriya



This is the story about Rukmi, brother of Goddess Rukmani, consort of Lord Krishna.

Bhojagaja was a King who ruled Vidharbha (Madhya Pradesh) region and had six children. One of them was Rukmi, a male and in the remaining five females, one was Goddess Rukmani. Due to a curse, Goddess Mahalakshmi was born as Goddess Rukmani while her brother Rukmi too got birth in the clan of Yadav on account of a curse he had earned in his past birth. None were aware that Goddess Rukmani was incarnation of Goddess Mahalakshmi. While Goddess Rukmani wanted to marry Lord Krishna the proposal to which her father had also consented, her brother Rukmi was opposed to the proposal and hurriedly arranged for a Swayamvara (the public choice of a consort by a princess) to get Goddess Rukmani married to some other King. One of the Kings Jarachandra

who was jealous of Lord Krishna too attended the Swayamvara along with several other Kings who were friendly to Jarachandra. All of them decided to insult Lord Krishna if he chose to attend the Swayamvara so that Lord Krishna would go away unable to bear the insult thus making it easy for Rukmi to get Goddess Rukmani married to a Chettinat King called Sisupala who was also opposed to Lord Krishna. However one of the Kings amongst the invitees who had soft corner for Lord Krishna sent a message asking the Lord to somehow reach the site and save Goddess Rukmani from getting married to Sisupala. On receiving the message from the King, Lord Krishna along with his brother Lord Balarama went with a big force and took away Goddess Rukmani from the palace while his forces destroyed the enemies present there. Sisupala ran away to save his life and as Lord Krishna was about to kill Rukmi, Goddess Rukmani pleaded mercy for her brother. Lord Krishna therefore ensured that the weapon threw on Rukmi simply shaved off the moustache and hair from the head of Rukmi and allowed him to go away unharmed.

Unable to bear the insult, Rukmi sat in penance seeking boon from Lord Shiva who pleased with his penance appeared before him and gave him a special weapon to beat his enemies but with a rider that the weapon cannot be used against Lord Mahavishnu and in the event he attempted to use it against Lord Mahavishnu, the power of the weapon would vanish. He went to Bhojagaja and took over the reign to become the ruler. During his reign he again waged a war with Lord Krishna but got defeated. Therefore he decided to become friendly with Lord Krishna instead of opposing him. When Mahabharatha war commenced Pandava brothers invited him to help them in the war. He agreed if

Arjun failed to fight the war. Hearing his comments Arjun taunted him and drove him away. Rukmi then tried to contact Duryodan to accept him, but Duryodan too rejected his request. Therefore feeling humiliated, he went back to his Kingdom to rule. One of the Kings of Kalinga suggested to Rukmi to play dice with neighbouring King Lord Balabadra. The King of Kalinga did not know that Lord Balabadra was incarnate of Lord Mahavishnu. He had manifested on earth to destroy evils which had spread its wings of tyranny far and wide. When Rukmi went and engaged with Lord Balabadra in the play of dice, initially though Rukmi won few games, as the time passed, slowly he lost everything including his domain to Lord Balabadra. When Rukmi refused to accept the defeat and began to fight with Lord Balabadra, he was hit with an iron rod on his head and fell dead. All others who instigated him to fight with Lord Balabadra ran away. In the dying moments Rukmi realized that Lord Balabadra was none other than Lord Mahavishnu and offered his obedience and prayers to him before he fell dead.